DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.98/2019**

**(CNR.No: TNTH06-000160 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராசுத்தேவர் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW1** | |

---

நாள் :08.02.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் பார்வையிட்டு அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சர்வேயர் அறிக்கையில் சர்வே எண். 453/12ல் மொத்த விஸ்தீரணம் 1332 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோன்று சர்வே எண். 453/13ல் மொத்த விஸ்தீரணம் 1761.5 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி இரண்டு சர்வே எண்களிலும் மொத்த விஸ்தீரணம் 3093.5 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சதுரடி கணக்கு பற்றி விபரம் எனக்கு தெரியாது. பிவாசாஆ1 ஆவணத்தின் படி 3பங்கின் கிழமேல் தென்வடல் அளவு குறிப்பிட்டு அதில் இரண்டு பங்கை நான் கிரையம் வாங்கியதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) பிவாசாஆ1 ஆவணத்தில் கண்ட சொத்தின் மொத்த 3 பங்கின் விஸ்தீரணம் 2223 சதுரடி என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. பிவாசாஆ1 ஆவணத்தில் சொல்லப்பட்ட 3 பங்கு நிலத்தின் விஸ்தீரண அளவைக்காட்டிலும் சர்வே எண். 453/12, சர்வே எண்., 453/13 ஆகியவற்றில் கூடுதலான விஸ்தீரண

நிலம் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சர்வே எண், 453/12, சர்வே எண். 453/13 நிலங்களில் மொத்த கிழமேல் தென்வடல் அடி அளவு என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்லமுடியும். சர்வே எண். 453/12 ன் கிழமேல் அளவு என்ன என்றால் தெற்கு 22 அடி, வடக்கு 19 அடி ஆகும். அதன் தென்வடல் இருபுறமும் 36 அடி ஆகும். நான் சொல்லும் மேற்படி பத்திரப்படியான அளவு என்றால் சரிதான். பட்டாவில் மேற்படி அளவைக்காட்டிலும் கூடுதலாக உள்ளது என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. சர்வே எண், 453/13 நிலத்தின் அளவு என்ன என்றால் தென்வடல் 53 அடியும், கிழமேல் 27 அடி ஆகும்.

3) மேற்படி அளவைக்காட்டிலும் பட்டாவில் கூடுதல் அளவு காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. சர்வே எண், 453/12 ல் ஒரு மரம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி மரம் வாதியின் வீட்டின் தகரத்தில் விழுவதாக கூறி வாதி மனு கொடுத்ததின் பேரில் அந்த மரம் வெட்டப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி வாதி கொடுத்த மனுவைப்பொறுத்து கோட்டாட்சியர் நேரில் வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான். கோட்டாட்சியர் நேரில் பார்வையிட வந்தபோது எனது மகன் கோட்டாட்சியரை அசிங்கமான வார்த்தைகள் பேசியதாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்., ஆனால் எனது மகன் அசிங்கமாக பேசவில்லை. மேற்படி வழக்கு ராயப்பன்பட்டி காவல்நிலைய குற்ற எண். 177/2019 ஆக பதிவு செய்யப்பட்டது, தனது மகன் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்தார் என்றால் சரிதான்.

4) 31.08.2023 ம் தேதி இரவு 7.00 மணிக்கு நான் கழிவு கடத்துவது சம்பந்தமாக எனக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அது குறித்து வாதி கொடுத்த புகாரின் பேரில் இராயப்பன்பட்டி காவல்நிலைய குற்ற எண். 291/2023 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், எனது தம்பி பழனிச்சாமியும் தனித்தனியாக வெவ்வேறு வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நானும், எனது தம்பி பழனிச்சாமியும் எங்களுக்குள் பாக விஸ்தீரணம் செய்து கொண்டோமா என்றால் இல்லை. நான் குடியிருக்கும்

வீட்டின் சர்வே எண். என்ன என்றால் சர்வே எண். 453/10, 453/13 ஆகும். எனது வீட்டிற்கு வாசல் தெற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 453/10 முன்னதாக ஆங்கத்தேவர் இடமாக இருந்தது என்றால் சரியல்ல, எங்கள் சொந்த இடமாகும். சர்வே எண். 453/10 இடமும், பிவாசாஆ 1 ஆவணத்தில் கட்டுப்பட்டதாக கூறுகிறேன் என்றால் சரிதான். எனது தம்பி பழனிச்சாமி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண். என்ன என்றால் சர்வே எண்., 453/12 ஆகும்.

5) 2 ம் பிரதிவாதியின் வீட்டின் வாசல்படி எந்த பக்கமாக உள்ளது என்றால் தெற்கு பாத்து உள்ளது. 2 ம் பிரதிவாதியின் வீடு கிழக்கு பார்த்த வாசல் என்றும், நான் அதை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது வீட்டின் கிழக்கு சுவரில் ஜன்னல் எதுவும் இல்லை என்றால் சரிதான். முன்னதாக எனது வீட்டின் கிழக்கு சுவரில் ஜன்னல் வைத்து பின்னர் 2 ம் பிரதிவாதி ஆட்சேபனை செய்ததால் அதை அடைத்து விட்டேன் என்றால் சரியல்ல. 2012 ம் வருடம் என் மீது தனபதி, அசுபதி என்பவர்கள் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 22/2012 தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். வாதியின் வீடு மேற்கு தலைவாசல் கொண்டது என்றால் சரிதான். அதேபோல் வாதியின் வீட்டின் மேற்கு சுவரில் ஒரு ஜன்னலும் உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டின் கூரை தண்ணீர் மேற்கும், வடக்கும் கடத்தப்படுகிறது என்றால் முன்னதாக மேற்கும், வடக்கும் கடத்தப்பட்டது, தற்போது மேற்கு மட்டும் கடத்தப்படுகிறது. முன்னதாக கூரையின் தண்ணீர் வடக்கு பக்கம் கடத்தப்பட்டபோது அந்த தண்ணீர் சர்வே எண். 453/39 வழியாக சென்றது என்றால் சரியல்ல.

6) தற்போது வாதியின் வீட்டின் கூரைதண்ணீர் சர்வே எண். 453/11ல் விழுந்து கடத்தப்படுகிறது என்றால் சரிதான், அதனால் தான் தாவா ஏற்பட்டது. வாதியின் கூரை வீட்டின் தண்ணீர் 40, 50 வருடமாக சர்வே எண்,. 453/11ல் விழுந்து தான் கடத்தப்படுகிறது என்றால் சரிதான், ஆனால் பழைய சுவரை நீக்கிவிட்டு, புதிய சுவர் மேற்கு 2.1/2 அடி தள்ளி கட்டியுள்ளார், அதனால் தான் தாவா ஏற்பட்டது. வாதியின் வீட்டின் கூரை தண்ணீர் சர்வே எண்., 453/11 ல் விழுந்து

கடத்தப்படுவதை தடுக்கும் நோக்கத்தில் நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மதிலை இடித்து தள்ளி கட்டிவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி மதிலை இடித்து கட்டினார் என்று காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது கைவசம் உள்ளது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். சர்வே எண், 453/11 ல் எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா பல்வேறு விதிமுறைகளை மீறி 3 முதல் 7 பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) அவ்வாறு விதிமுறைகளை மீறி எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. வாசாஆ 20 புகைப்படங்கள் அனைத்தும் வாதியின் வீடு, சர்வே எண். 453/11 இடம், அதில் இடிக்கப்பட்ட சுவர்கள், வெட்டப்பட்ட மரம் ஆகியவற்றை காட்டக்கூடிய புகைப்படங்கள் என்றால் சரிதான், அவை முன்னதாக இருந்தது, தற்போது இல்லை. வாதி கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.